வைத்துக்கிடந்த மலர்மார்பா ! வாய்திறவாய் *
மைத்தடங்கண்ணினாய் ! நீ உன்மணாளனை *
எத்தனைபோதும் துயிலெழவொட்டாய்காண் *
எத்தனையேலும்பிரிவாற்றகில்லாயால் *
தத்துவமென்று தகவேலோரெம்பாவாய். 19

முப்பத்துமூவர் அமரர்க்குமுன்சென்று *
கப்பம்தவிர்க்கும்கலியே ! துயிலெழாய் *
செப்பமுடையாய் ! திறலுடையாய் ! * செற்றார்க்கு
வெப்பம்கொடுக்கும் விமலா ! துயிலெழாய் *
செப்பென்னமென்முலைச் செவ்வாய்ச்சிறுமருங்குல் *
நப்பின்னைநங்காய் ! திருவே ! துயிலெழாய் *
உக்கமும்தட்டொளியும் தந்துஉன்மணாளனை *
இப்போதே எம்மைநீராட்டேலோரெம்பாவாய். 20

ஏற்றகலங்கள் எதிர்பொங்கிமீதளிப்ப *
மாற்றாதேபால்சொரியும் வள்ளல்பெரும்பசுக்கள் *
ஆற்றப்படைத்தான்மகனே ! அறிவுறாய் *
ஊற்றமுடையாய் ! பெரியாய் ! * உலகினில்
தோற்றமாய்நின்ற சுடரே ! துயிலெழாய் *
மாற்றார்உனக்கு வலிதொலைந்துஉன்வாசற்கண் *
ஆற்றாதுவந்து உன்னடிபணியுமாபோலே *
போற்றியாம்வந்தோம் புகழ்ந்தேலோரெம்பாவாய். 21.

அங்கண்மாஞாலத்தரசர் * அபிமான
பங்கமாய்வந்து நின்பள்ளிக்கட்டிற்கீழே *
சங்கமிருப்பார்போல் வந்துதலைப்பெய்தோம் *
கிங்கிணிவாய்ச்செய்த தாமரைப்பூப்போலே *
செங்கண்சிறுச்சிறிதே எம்மேல்விழியாவோ ? *
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல் *
அங்கணிரண்டும்கொண்டு எங்கள்மேல்நோக்குதியேல் *
எங்கள்மேல்சாபம் இழிந்தேலோரெம்பாவாய். 22

**மாரிமலைமுழைஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும் *
சீரியசிங்கம் அறிவுற்றுத்தீவிழித்து *
வேரிமயிர்பொங்க எப்பாடும்பேர்ந்துதறி *
மூரிநிமிர்ந்து முழங்கிப்புறப்பட்டு *
போதருமாபோலே நீ பூவைப்பூவண்ணா ! * உன்
கோயில் நின்றும் இங்ஙனேபோந்தருளி * கோப்புடைய
சீரியசிங்காசனத்துஇருந்து * யாம்வந்த
காரியம் ஆராய்ந்தருளேலோரெம்பாவாய். 23.

**அன்றுஇவ்வுலகம்அளந்தாய்! அடிபோற்றி *
சென்றங்குத்தென்னிலங்கைசெற்றாய்! திறல்போற்றி *
பொன்றச்சகடம்உதைத்தாய் ! புகழ்போற்றி *
கன்றுகுணிலாஎறிந்தாய் ! கழல்போற்றி *
குன்றுகுடையாஎடுத்தாய் ! குணம்போற்றி *
வென்றுபகைகெடுக்கும் நின்கையில்வேல்போற்றி *
என்றென்றும்உன்சேவகமே ஏத்திப்பறைகொள்வான் *
இன்றுயாம்வந்தோம் இரங்கேலோரெம்பாவாய். 24

ஒருத்திமகனாய்ப்பிறந்து * ஓரிரவில்
ஒருத்திமகனாய் ஒளித்துவளர *
தரிக்கிலானாகித் தான்தீங்குநினைந்த *
கருத்தைப்பிழைப்பித்துக் கஞ்சன்வயிற்றில் *
நெருப்பென்னநின்ற நெடுமாலே ! * உன்னை
அருத்தித்துவந்தோம் பறைதருதியாகில் *
திருத்தக்கசெல்வமும் சேவகமும்யாம்பாடி *
வருத்தமும்தீர்ந்து மகிழ்ந்தேலோரெம்பாவாய். 25

மாலே ! மணிவண்ணா ! மார்கழி நீராடுவான் *
மேலையார் செய்வனகள் வேண்டுவனகேட்டியேல் *
ஞாலத்தையெல்லாம் நடுங்கமுரல்வன *
பாலன்னவண்ணத்து உன்பாஞ்சசன்னியமே *
போல்வனசங்கங்கள் போய்ப்பாடுடையனவே *
சாலப்பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே *
கோலவிளக்கே கொடியேவிதானமே *
ஆலினிலையாய் ! அருளேலோரெம்பாவாய். 26

**கூடாரைவெல்லும்சீர்க்கோவிந்தா! * உன்தன்னைப்
பாடிப்பறைகொண்டு யாம்பெறுசம்மானம் *
நாடுபுகழும் பரிசினால்நன்றாக *
சூடகமேதோள்வளையே தோடேசெவிப்பூவே *
பாடகமேயென்றனைய பல்கலனும்யாமணிவோம் *
ஆடையுடுப்போம் அதன்பின்னேபாற்சோறு *
மூடநெய்பெய்து முழங்கைவழிவார *
கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய். 27

**கறவைகள்பின்சென்று கானம்சேர்ந்துண்போம் *
அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து * உன்தன்னைப்
பிறவிபெறுந்தனை புண்ணியம்யாமுடையோம் *
குறையொன்றுமில்லாத கோவிந்தா ! உன்தன்னோடு
உறவேல்நமக்கு இங்குஒழிக்கஒழியாது *
அறியாதபிள்ளைகளோம் அன்பினால் * உன்தன்னைச்
சிறுபேரழைத்தனவும்சீறியருளாதே *
இறைவா ! நீதாராய் பறையேலோரெம்பாவாய். 28

## திருப்பாவை சாற்றுமுறை பாசுரங்கள்:

**சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச்சேவித்து * உன்
பொற்றாமரையடியே போற்றும்பொருள்கேளாய் *
பெற்றம்மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து * நீ
குற்றேவல்எங்களைக் கொள்ளாமல்போகாது *

இற்றைபறைகொள்வா னன்றுகாண்கோவிந்தா ! *
எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் * உன்தன்னோடு
உற்றோமேயாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம் *
மற்றைநங்காமங்கள் மாற்றேலோரெம்பாவாய். 29

**வங்கக்கடல்கடைந்த மாதவனைக்கேசவனை *
திங்கள்திருமுகத்துச் சேயிழையார்சென்றிறைஞ்சி *
அங்கப்பறைகொண்டவாற்றை * அணிபுதுவைப்
பைங்கமலத்தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன *
சங்கத்தமிழ்மாலை முப்பதும்தப்பாமே *
இங்குஇப்பரிசுரைப்பார் ஈரிரண்டுமால்வரைத்தோள் *
செங்கண்திருமுகத்துச் செல்வத்திருமாலால் *
எங்கும்திருவருள்பெற்று இன்புறுவரெம்பாவாய். 30

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்

தத்விஷ்ணோ ! பரமம் பதஸம் ஸதா பஶ்யந்தி ஸூரய: திவீவ சக்ஷுராததம் தத்விப்ராஸோ விபந்யவோ ஜாக்ருவாம்ஸஸ் ஸமிந்ததே விஷ்ணோர்யத்பரமம் பதம்

பர்யாப்த்யா அநந்தராயாய ஸர்வஸ்தோமோ திராத்ர முத்தம மஹர்பவதி ஸர்வஸ்யாப்த்யை ஸர்வஸ்ய ஜித்யை ஸர்வமேவ தேநாப்ஸநோதி ஸர்வம் ஜயதி.

*திருப்பாவை சாற்றுமுறை பாசுரங்கள் ஸேவித்து பல்லாண்டு ஸேவிப்பர்*

## திருப்பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு*
பலகோடிநூறாயிரம் *
மல்லாண்டதிண்தோள்மணிவண்ணா ! * உன்
சேவடி செவ்விதிருக்காப்பு.

அடியோமோடும்நின்னோடும் பிரிவின்றி ஆயிரம்பல்லாண்டு*
வடிவாய்நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு
வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு*
படைபோர்புக்குமுழங்கும்அப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே.

## வாழித்திருநாமம் :

ஸர்வதேஶதஶாகாலேஷ்வவ்யாஹதபராக்ரமா
ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா வர்ததாமபிவர்த்தாம்

ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா
திகந்தவ்யாபி நீ பூயாத் ஸா ஹி லோகஹிதைஷிணீ

ஸ்ரீமந் ஸ்ரீரங்க ச்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய
ஸ்ரீமந் ஸ்ரீரங்க ச்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய

நமஶ் ஸ்ரீஶைலநாதாய குந்தீ நகரஜந்மநே
ப்ரஸாதலப்த பரமப்ராப்ய கைங்கர்ய ஶாலிநே

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம்

வாழிதிருவாய்மொழிப்பிள்ளை மாதகவால் *
வாழும்மணவாளமாமுனிவன் * – வாழியவன்

மாறன்திருவாய்மொழிப்பொருளை * மாநிலத்தோர்
தேறும்படியுரைக்குஞ்சீர்.

செய்யதாமரைத்தாளிணைவாழியே சேலைவாழிதிருநாபிவாழியே *
துய்யமார்பும்புரிநூலும்வாழியே சுந்தரத்திருத்தோளிணைவாழியே *


கையுமேந்தியமுக்கோலும்வாழியே
கருணைபொங்கியகண்ணிணைவாழியே*
பொய்யிலாதமணவாளமாமுனி புந்திவாழிபுகழ்வாழிவாழியே.

அடியார்கள்வாழ அரங்கநகர்வாழ *
சடகோபன்தண்தமிழ்நூல்வாழ * –
கடல்சூழ்ந்த மண்ணுலகம்வாழ * மணவாளமாமுனியே !
இன்னும்ஒருநூற்றாண்டுஇரும்.

## ஸ்ரீ ஆண்டாள் வாழித்திருநாமம்

திருவாடிப்பூரத்துச்செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதுஞ் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப்பின்னானாள் வாழியே
ஒருநூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கற்கே கண்ணியுகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

ஸ்ரீ :



ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமிநே நம:
ஸ்ரீ அலர்மேல்மங்கா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஸ்வாமிநே நம:
ஸ்ரீ பெருந்தேவி நாயிகா ஸமேத ஸ்ரீ தேவராஜ ஸ்வாமிநே நம:
ஸ்ரீ யதுகிரி நாயிகா ஸமேத ஸ்ரீ திருநாராயண ஸ்வாமிநே நம:
ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கமன்னார் ஸ்வாமிநே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீ வேங்கடகுரவே நம:
ஸ்ரீ அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

# பொதுத் தனியன்கள்

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் |
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம் |
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||

யோ நித்யமச்யுத பதாம்புஜயுக்மருக்ம–
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே |
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ||

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம்யதேவ நியமேந மதந்வயாநாம் |
ஆத்யஸ்ய ந: குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||

பூதம் ஸரஸ்ய மஹதாஹ்வய பட்டநாத–
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந் |
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ||

# முதலாயிரம்

திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழிகளின் தனியன்கள்

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநஶேஷாந்
நரபதிபரிக்லுப்தம் ஶுல்கமாதாதுகாம: |
ஶ்வஶுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்று*ஒருகால்
சொன்னார்கழற்கமலம்சூடினோம்*—முன்னாள்
கிழியறுத்தானென்றுரைத்தோம், கீழ்மையினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே ! வந்து.

பாண்டியன்கொண்டாடப் பட்டர்பிரான்வந்தானென்று *
ஈண்டியசங்கமெடுத்தூத *—வேண்டிய
வேதங்களோதி விரைந்துகிழியறுத்தான் *
பாதங்கள்யாமுடையபற்று.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த

# திருப்பல்லாண்டு

**பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு * பலகோடி நூறாயிரம்
மல்லாண்டதிண்தோள்மணிவண்ணா ! * உன் சேவடிசெவ்விதிருக்காப்பு (1)

**அடியோமோடும்நின்னோடும் பிரிவின்றி ஆயிரம்பல்லாண்டு *
வடிவாய்நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு *
வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு
படைபோர்புக்குமுழங்கும்அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே. (2)

வாழாட்பட்டுநின்றீர்உள்ளீரேல் வந்துமண்ணும்மணமும்கொண்மின் *
கூழாட்பட்டுநின்றீர்களை எங்கள்குழுவினில்புகுதலொட்டோம் *
ஏழாட்காலம்பழிப்பிலோம்நாங்கள் இராக்கதர்வாழ் * இலங்கை
பாழாளப்படைபொருதானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (3)

ஏடுநிலத்தில்இடுவதன்முன்னம்வந்து எங்கள்குழாம்புகுந்து *
கூடுமனமுடையீர்கள் வரம்பொழிவந்துஒல்லைக்கூடுமினோ *
நாடுநகரமும்நன்கறிய நமோநாராயணாயவென்று *
பாடுமனமுடைப்பத்தருள்ளீர்! வந்துபல்லாண்டு கூறுமினே. (4)

அண்டக்குலத்துக்கதிபதியாகி அசுரரிராக்கதரை *
இண்டைக்குலத்தைஎடுத்துக்களைந்த இருடிகேசன்தனக்கு *
தொண்டக்குலத்திலுள்ளீர்! வந்தடிதொழுது ஆயிரநாமம்சொல்லி
பண்டைக்குலத்தைத்தவிர்ந்துபல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்மினே. (5)

எந்தைதந்தைதந்தைதந்தைதம்மூத்தப்பன் ஏழ்படிகால்தொடங்கி *
வந்துவழிவழிஆட்செய்கின்றோம் * திருவோணத்திருவிழவில்
அந்தியம்போதிலரியுருவாகி அரியையழித்தவனை *
பந்தனைத்தீரப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்றுபாடுதுமே. (6)

தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச்சக்கரத்தின் *
கோயிற்பொறியாலேஒற்றுண்டுநின்று குடிகுடிஆட்செய்கின்றோம் *
மாயப்பொருபடைவாணனை ஆயிரந்தோளும்பொழிகுருதி பாய*
சுழற்றியஆழிவல்லானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (7)

நெய்யிடைநல்லதோர்சோறும் நியதமும்அத்தாணிச்சேவகமும் *
கையடைக்காயும்கழுத்துக்குப்பூணொடு காதுக்குக்குண்டலமும் *
மெய்யிடைநல்லதோர்சாந்தமும்தந்து என்னைவெள்ளுயிராக்கவல்ல *
பையுடைநாகப்பகைக்கொடியானுக்குப் பல்லாண்டுகூறுவனே. (8)

உடுத்துக்களைந்த நின்பீதகவாடையுடுத்துக் கலத்ததுண்டு *
தொடுத்ததுழாய்மலர்சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம் *
விடுத்தத்திசைக்கருமம்திருத்தித் திருவோணத்திருவிழவில் *
படுத்தபைந்நாகணைப்பள்ளிகொண்டானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (9)

எந்நாள்எம்பெருமான் உன்தனக்கடியோமென்றெழுத்தப்பட்ட
எந்நாளே* அடியோங்களடிக்குடில் வீடுபெற்றுஉய்ந்ததுகாண் *
செந்நாள்தோற்றித் திருமதுரையுள்சிலைகுனித்து * ஐந்தலைய
பைந்நாகத்தலைப்பாய்ந்தவனே ! உன்னைப்பல்லாண்டு கூறுதுமே. (10)

**அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன்*அபிமானதுங்கன்
செல்வனைப்போலத் திருமாலே! நானும்உனக்குப்பழவடியேன் *
நல்வகையால்நமோநாராயணாவென்று நாமம்பலபரவி*
பல்வகையாலும்பவித்திரனே! உன்னைப்பல்லாண்டு கூறுவனே. (11)

**பல்லாண்டென்றுபவித்திரனைப்பரமேட்டியை * சார்ங்கமென்னும்
வில்லாண்டான்தன்னை வில்லிபுத்தூர்விட்டுசித்தன்விரும்பியசொல் *
நல்லாண்டென்றுநவின்றுரைப்பார் நமோநாராயணாயவென்று *
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே. (12)

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மதுரகவியாழ்வார் அருளிச்செய்த

# கண்ணிநுண்சிறுத்தாம்பு

தனியன்கள்

*அவிதிதவிஷயாந்தரச்சடாரேருபநிஷதாமுபகாநமாத்ரபோக: |*
*அபி ச குணவசாத்ததேகசேஷீ மதுரகவிர்ஹ்ருதயே மமாவிரஸ்து ||*

***வேறொன்றும்நான் அறியேன் வேதம்தமிழ்செய்த ****
***மாறன்சடகோபன் வண்குருகூர் ஏறு * எங்கள்***
***வாழ்வாமென்றேத்தும் மதுரகவியார் * எம்மை ஆள்வாரவரேயரண்.***

**கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணியபெருமாயன் * என்னப்பனில்
நண்ணித்தென்குருகூர் நம்பியென்றக்கால் *
அண்ணிக்குமமுதூறும் என்னாவுக்கே. 1.

நாவினால்நவிற்று இன்பமெய்தினேன் *
மேவினேன் அவன்பொன்னடிமெய்ம்மையே *
தேவுமற்றறியேன் குருகூர்நம்பி *
பாவினின்னிசை பாடித்திரிவனே. 2.

திரிதந்தாகிலும் தேவபிரானுடை *
கரியகோலத் திருவுருக்காண்பன்நான் *
பெரியவண்குருகூர் நகர்நம்பிக்கு ஆள்
உரியனாய் * அடியேன் பெற்றநன்மையே. 3.

நன்மையால்மிக்க நான்மறையாளர்கள் *
புன்மையாகக்கருதுவராதலின் *
அன்னையாய்அத்தனாய்என்னையாண்டிடும்
தன்மையான் * சடகோபன் என்நம்பியே. 4.

நம்பினேன் பிறர்நன்பொருள்தன்னையும் *
நம்பினேன் மடவாரையும்முன்னெலாம் *
செம்பொன்மாடத் திருக்குருகூர்நம்பிக்கு
அன்பனாய்*அடியேன் சதிர்த்தேன்இன்றே. 5.

இன்றுதொட்டும் எழுமையும்எம்பிரான் *
நின்றதன்புகழ் ஏத்தஅருளினான் *
குன்றமாடத் திருக்குருகூர்நம்பி *
என்றும்என்னை இகழ்விலன்காண்மினே. 6

கண்டுகொண்டுஎன்னைக் காரிமாறப்பிரான் *
பண்டைவல்வினை பாற்றியருளினான் *
எண்திசையும் அறியஇயம்புகேன் *
ஒண்தமிழ்ச் சடகோபனருளையே. 7

அருள் கொண்டாடும் அடியவர்இன்புற *
அருளினான் அவ்வருமறையின்பொருள் *
அருள்கொண்டு ஆயிரம்இன்தமிழ்பாடினான்*
அருள்கண்டீர் இவ்வுலகினில்மிக்கதே. 8

மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் *
நிற்கப்பாடி என்நெஞ்சுள்நிறுத்தினான் *
தக்கசீர்ச்சடகோபன் என்நம்பிக்கு * ஆள்
புக்ககாதல் அடிமைப்பயனன்றே. 9.

**பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் *
செயல்நன்றாகத்திருத்திப் பணிகொள்வான் *
குயில்நின்றார்பொழில்சூழ் குருகூர்நம்பி ! *
முயல்கின்றேன்உன்தன்மொய்கழற்கன்பையே. 10.

**அன்பன்தன்னை அடைந்தவர்கட்கெல்லாம்
அன்பன் * தென்குருகூர் நகர்நம்பிக்கு *
அன்பனாய் மதுரகவிசொன்னசொல்
நம்புவார்பதி * வைகுந்தம் காண்மினே. 11.

மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த

# திருவாய்மொழி

## தனியன்கள்

பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம் |
ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிட வேதஸாகரம் ||

திருவழுதிநாடென்றும் தென்குருகூரென்றும் *
மருவினிய வண்பொருநலென்றும் * — அருமறைகள்
அந்தாதி செய்தானடியிணையே எப்பொழுதும் *
சிந்தியாய் நெஞ்சே ! தெளிந்து.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர்பேணும் *
இனத்தாரையல்லா திறைஞ்சேன் * — தனத்தாலும்
ஏதும்குறைவிலேன் * எந்தைசடகோபன்
பாதங்கள் யாமுடையபற்று.

ஏய்ந்தபெருங்கீர்த்தி யிராமாநுசமுனிதன் *
வாய்ந்தமலர்ப்பாதம் வணங்குகின்றேன் * —
ஆய்ந்தபெருஞ்சீரார்சடகோபன்
செந்தமிழவேதம்தரிக்கும் *பேராதவுள்ளம்பெற.

வான்திகழும்சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல் *
ஆன்றதமிழ்மறைகளாயிரமும் * — ஈன்ற
முதல்தாய் சடகோபன் * மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமாநுசன்.

மிக்கவிறைநிலையும் மெய்யாமுயிர்நிலையும் *
தக்கநெறியும் தடையாகித் — தொக்கியலும் *
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்*
யாழினிசை வேதத்தியல்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நாராயணாய நம: ஸ்ரீகோதாயை நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

# வேதவிண்ணப்பம்

## ருக்வேதம்

ஹரி: ஓம் | அக்நி மீடே(ள) புரோஹிதம் யக்ஞஸ்ய தேவமித்ருஜம் | ரத்நதாதமம் | ஹரி: ஓம் ||

## யஜுர்வேதம்

ஹரி: ஓம் | ஈஷே த்வோர்ஜேத்வா வாயவ ஸ்தோபாயவஸ்ய தேவோவ: ஸவிதா ப்ரார்பயது ஶ்ரேஷ்டதமாய கர்மண ஆப்யாயத்வ மக்நியா தேவபாகம்ஜேஸஸ்வதீ: பயஸ்வதீ: ப்ரஜாவதீரநமீசா அயக்ஷ்மாமாவஸ்தேந ஈஷத்மாஸவஷகும்ஸோ ருத்ரஸ்ய ஹதி: பரிவோவ்ருகஸ்து த்ருவா அஸ்மிங் கோபதோ ஸ்யாத பர்ஹீர்யஜமாநஸ்ய பஶூந் பாஹி || ஹரி: ஓம் ||

## ஸாமவேதம்

ஹரி: ஓம் | அக்ந ஆயாஹி வீதயே க்ருணாநோ ஹவ்யதாதயே| நிஹோதா ஸத்ஸி பர்ஹிஷி || ஹரி: ஓம் ||

## அதர்வணவேதம்

ஹரி: ஓம் | ஶந்நோதேவீரபிஷ்டய ஆபோ பவந்து பீதயே | ஶம்யோரபிஶ்ரவந்துந: || ஹரி: ஓம் ||

## உபநிஷதம்

ஓமித்யக்ரே வ்யாஹரேத் | நம இதி பஶ்சாத் | நாராயணாயேத் யுபரிஷ்டாத் | ஓமித்யேகாக்ஷரம் | நம இதி த்வே அக்ஷரே | நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி | ஏதத்வை நாராயணஸ்யாஷ்டாக்ஷரம் பதம் | யோஹவை நாராயணஸ் யாஷ்டாக்ஷரம் பதமத்யேதி | அநுபப்ருவ: ஸர்வமாயுரேதி | விந்ததே ப்ராஜாபத்யம் ராயஸ்போஷம் கௌபத்யம் |

ததோऽம்ருதத்வமஶ்நுதே ததோऽம்ருதத்வ-மஶ்நுத இதி | ய ஏவம் வேத | இத்யுபநிஷத்||

ஆபஸ்தம்பஸூத்ரம்

அத கர்மாண்யாசாராத்யாநி க்ருஹ்யந்தே | உதகயந பூர்வபக்ஷா: புண்யாஹேஷு கார்யாணி யஜ்ஞோபவீதிநா ப்ரதக்ஷிணம் ||

ஸ்ரீமத் ராமாயணம்

தபஸ்ஸ்வாத்யாயநிரதம் தபஸ்வீ வாக்விதாம் வரம்|
நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர்முநிபுங்கவம் ||

ஸ்ரீவிஷ்ணுபுராணம்

பராஶரம் முநிவரம் க்ருதபௌர்வாஹ்நிக க்ரியம் |
மைத்ரேய: பரிப்ரபச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச |

ஸ்ரீபகவத் கீதை

தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ: |
மாமகா: பாண்டவாஶ்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய ||

ஸ்தோத்ரரத்நம்

நமோ சிந்த்யாத்புதாக்லிஷ்டஜ்ஞாநவைராக்ய ராஶயே |
நாதாயமுநயேகாதபகவத்பக்தி ஸிந்தவே

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் |
ஆத்யஸ்ய ந: குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||

ஸ்ரீபாஷ்யம்

அகிலபுவநஜந்மஸ்தேமபங்காதிலீலே
விநதவிவிதபூதவ்ராதரக்ஷைகதீக்ஷே |
ஶ்ருதி ஶிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே
பவது மம பரஸ்மிந் ஶேமுஷீ பக்திரூபா ||

பாராஶர்யவசஸ்ஸுதா முபநிஷத் துக்தாப்தி மத்யோத்த்ருதாம் ஸம்ஸாராக்நிவிதீப நவ்யபகத ப்ராணாத்ம ஸஞ்ஜீவநீம் | பூர்வாசார்ய ஸுரக்ஷிதாம் பஹுமதிவ்யாகாத தூரஸ்திதா மாநீதாந்து நிஜாக்ஷரை ஸ்ஸுமநஸோ பௌமா: பிபந்த்வந்வஹம் ||

ஓம் பகவத்போதாயநக்ருதாம், விஸ்தீர்ணாம் ப்ரஹ்ம ஸூத்ர வ்ருத்திம் பூர்வாசார்யா: ஸஞ்சிக்ஷிபு: தத்மதாநுஸாரேந ஸூத்ராக்ஷராணி வ்யாக் யாஸ்யந்தே | அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா|

அத்ராயமதசப்த ஆநந்தரயேபவதி | அதஶ்ஶப்தோ வ்ருத்தஸ்ய ஹேதுபாவே அதீதஸாங்க ஸஶிரஸ்க வேதவ்யாதிகநால்மாத்திர பல கேவல கர்ம ஜ்ஞாநதயா ஸஞ்ஜாத மோக்ஷாபிலாஷஸ்யாநந்தஸ்திரபல ப்ரஹ்ம ஜிஜ்ஞா ஸாஹ்ய நந்தரபாவநீ: ப்ரஹ்மணோ ஜிஜ்ஞாஸா ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா| ப்ரஹ்மணஇதி கர்மணிஷஷ்டீ |

கர்த்ரு கர்மணோ: க்ருதி இதி விசேஷவிதாநாத், யத்யபி ஸம்பந்த ஸாமாந்ய பரிக்ரஹோபி ஜிஜ்ஞாஸாயா: கர்மா பேக்ஷித்வேந கர்மார்த்தத்வ ஸித்தி:, ததாப் யாக்ஷேபதாப்ராப்தாந் ஆபிதாநிகஸ்யைவ க்ராஹ்யத்வாத்கர்மணிஷஷ்டீ க்ருஹ்யதே | நச ப்ரதிபத விநாநாஷஷ்டீ ந ஸமஸ்யதே இதி ப்ரதிப்ரஸவ ஸத்பாவாத் | ப்ரஹ்ம ஸப்தேநச ஸ்வபாவதோ நிரஸ்த நிகில தோஷோ நவகாதிஶயா ஸங்க்யேய கல்யாண குணகண: புருஷோத்தமோ:பிதீயதே ஸர்வத்ர ப்ருஹத்வ குணயோசே நஹி ப்ரஹ்மஶப்த: | ப்ருஹத்த்வஞ்ச ஸ்வரூபேண குணைஶ்ச யத்ரா நவதிகாதிசயாம் ஸோஸ்யமுக்யோர்த்த: ஸசஸர்வேஸ்வர ஏவ அதோ ப்ரஹ்மஶப்தஸ் தத்ரைவ முக்யவ்ருத்த: | தஸ்மாத் அந்யத்ர தத்குணலேஶயோகாதௌபசாரிக:, அநேகார்த்த கல்பநா யோகாத், பகவச்சப்தவத் | தாபத்ரயாதுரை ரம்ருதத்வாய ஸ ஏவ ஜிஜ்ஞாஸ்ய: | அதஸ்ஸர்வேஸ்வர ஏவ ஜிஜ்ஞாஸாகர்ம புருஷோத்தமோ: பிதீயதே ஸர்வத்ர ப்ருஹத்வ குணயோசே நஹி ப்ரஹ்மஶப்த: | ப்ருஹத்த்வஞ்சஸ்வரூபேண குணைஶ்ச யத்ரா நவதிகாதிசயாம் ஸோஸ்யமுக்யோர்த்த: ஸசஸர்வேஸ்வர ஏவ அதோ ப்ரஹ்மஶப்தஸ் தத்ரைவ முக்யவ்ருத்த: | தஸ்மாத் அந்யத்ர தத்குணலேஶ யோகாதௌப சாரிக:, அநேகார்த்த கல்பநாயோகாத், பகவச்சப்தவத் | தாபத்ரயாதுரை ரம்ருதத்வாய ஸ ஏவ ஜிஜ்ஞாஸ்ய: | அதஸ்ஸர்வேஸ்வர ஏவ ஜிஜ்ஞாஸாகர்மபூதம் ப்ரஹ்ம ஜ்ஞாதுமிச்சா, ஜிஜ்ஞாஸா | இச்சாயா இஷ்யமாண ப்ரதாநத்வா திஷ்யமாணம் ஜ்ஞா நமிஹவிதீயதே | மீமாம்ஸாபூர்வ பாக க்ஞாதஸ்ய கர்மணோல்பாஸ்த்திர பலத்வாது பரிதந பாகாவஸேயஸ்ய ப்ரஹ்மஞ்ஞா நஸ்யாந (ஸ்திர)ந்தா க்ஷயபலத்வாச்ச பூர்வ வ்ருத்தாத் தர்மஞாநாதநந்தரம் ததஏவ ஹேதோர் ப்ரஹ்மஞாதவ்யம் இத்யுக்தம் பவதி |

ஸ்ரீவரதராஜஸ்தவம்

ஸ்வஸ்தி ஹஸ்திகிரிமஸ்தஶேகரஸ்ஸந்தநோது மயிஸந்ததம் ஹரி: | நிஸ்ஸமாப்யதிகமப்யதத்தயம் தேவமௌஷநஷதீ ஸரஸ்வதி ||

ஸ்ரீநிதிம் நிதிமபாரமர்த்திநாம் அர்த்திதார்த்தபரிதாந தீக்ஷிதம் | ஸர்வபூத ஸுஹ்ருதம் தயாநிதிம் தேவராஜமதி ராஜமமஶ்ரயே |

உயர்வறவுயர்நலம் உடையவன் யவனவன் *
மயர்வறமதிநலம் அருளினன் யவனவன் *
அயர்வறுமமரர்கள் அதிபதி யவனவன் *
துயரறுசுடரடி தொழுதெழுஎன்மனனே (1–1–1) . . . *முதல்*

*திருவாய்மொழி 10ம் பத்து வரை*

*இராமாநுச நூற்றந்தாதி முழுவதும்*

** உபதேசரத்தினமாலை முழுவதும் சேவை.*

## சாற்றுமுறை

தத்விஷ்ணோ ஶ்ரீ பரமம் பதஶம் ஸதா பஶ்யந்தி ஸூரய: திவீவ சக்ஷுராததம் தத்விப்ராஸோ விபந்யவோ ஜாக்ருவாகும் ஸஸ் ஸமிந்ததே விஷ்ணோர்யத்பரமம் பதம்

பர்யாப்த்யா அநந்தராயாய ஸர்வஸ்தோமோ திராத்ர முத்தம மஹர்பவதி ஸர்வஸ்யாப்த்யை ஸர்வஸ்ய ஜித்யை ஸர்வமேவ தேநாப்டநோதி ஸர்வம் ஜயதி.

### முக்தக மங்களம்

1. கோயில் (போக மண்டபம்)

லக்ஷ்மீ சரணலாக்ஷாங்கஸாக்ஷி ஶ்ரீவத்ஸ வக்ஷஸே
க்ஷேமங்கராய ஸர்வேஷாம் ஶ்ரீரங்கேஸாய மங்களம்

2. திருமலை (புஷ்ப மண்டபம்)

ச்ரிய: காந்தாய கல்யாணநிதயே நிதயேர்த்திநாம்
ஶ்ரீவேங்கட நிவாஸாய ஶ்ரீநிவாஸாய மங்களம்

3. பெருமாள் கோவில் (தியான மண்டபம்)

அஸ்துஶ்ரீஸ்தநகஸ்தூரி வாஸநா வாஸிதோரஸே
ஶ்ரீஹஸ்திகிரிநாதாய தேவராஜாய மங்களம்

4. திருநாராயணபுரம் (ஞானமண்டபம்)

கமலாகுச கஸ்தூரீ கர்தமாங்கித வக்ஷஸே
யாதவாத்ரி நிவாஸாய ஸம்பத்புத்ராய மங்களம்

5. ஸ்ரீஜகந்நாதம்

நீலாஞ்சல நிவாஸாய நித்யாய பரமாத்மநே
ஸுபத்ரா ப்ராண நாதாய ஜகந்நாதாய மங்களம்

6. சக்ரவர்த்தி திருமகன்

மங்களம் கோஸலேந்த்ராய மஹநீய குணாப்தயே
சக்ரவர்த்திதநூஜாய ஸார்வபௌமாய மங்களம்

ஆஸாத்ய நகரீம் திவ்யாம் அபிஷிக்தாய ஸீதயா
ராஜாதிராஜ ராஜாய ராமபத்ராய மங்களம்

7. ஸ்ரீ ஆண்டாள்

ஸ்ரீமத்யை விஷ்ணுசித்தார்ய மநோநந்தன ஹேதவே
நந்தநந்தநஸுந்தர்யை கோதாயை நித்ய மங்களம்

8. நம்மாழ்வார்

ஸ்ரீநகர்யாம் மஹாபுர்யாம் தாம்ரபர்ணியுத்தரே தடே
ஸ்ரீதிந்த்ரிணீ மூலதாம்நே சடகோபாய மங்களம்

10. திருமங்கையாழ்வார்

ஸ்ரீமதாலி ஸ்ரீநகரீ நாதாய கலிவைரிணே
சதுஷ்கவி ப்ரதாநாய பரகாலாய மங்களம்

11. எம்பெருமானார்

ஸ்ரீமந் மஹாபூதபுரே ஸ்ரீமத்கேஸவயஜ்வன:
காந்திமத்யாம் ப்ரஸூதாய யதிராஜாய மங்களம்

12. மணவாள மாமுனிகள்

ஸ்ரீமதே ரம்ய ஜாமாத்ரு முநீந்த்ராய மஹாத்மனே
ஸ்ரீரங்கவாஸிநே பூயாத் நித்யஸ்ரீ நித்ய மங்களம்

13. ஸர்வ ஆசாரியர்கள்

மங்களாசாஸநபரை: மதாசார்யபுரோகமை:
ஸர்வைஸ்ச பூர்வை: ஆசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம்

ஓம் நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி
தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத்

ஓம் மஹாதேவ்யை ச வித்மஹே விஷ்ணுபத்னீ: ச தீமஹி
தந்நோ லக்ஷ்மீ : ப்ரசோதயாத்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நாராயணாய நம: ஸ்ரீகோதாயை நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

# அருளிச்செயல் சாற்றுமுறை

## முதல் நாள் ஸேவை சாற்றுமுறை

**முதல் திருவந்தாதி**

***உளன் கண்டாய்நன்னெஞ்சே! உத்தமனென்றும்
உளன்கண்டாய் * உள்ளுவாருள்ளத்து – உளன்கண்டாய் *
வெள்ளத்தினுள்ளானும் வேங்கடத்து மேயானும்*
உள்ளத்தினுள்ளானென்றுஓர். (99)*

***ஓரடியும்சாடுடைத்த ஒண்மலர்ச்சேவடியும்
ஈரடியும் காணலாம் என்னெஞ்சே! * ஓரடியின்
தாயவனைக்கேசவனைத்தண்துழாய்மாலைசேர்
மாயவனையேமனத்துவை. (100)*

*வையம்தகளியா வார்கடலேநெய்யாக *
வெய்யகதிரோன் விளக்காக * – செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினேன்சொல்மாலை
இடராழி நீங்குகவேயென்று. (1)*

திருவாய்மொழி (1–1) :

***மறப்பும்ஞானமும் நானொன்றுணர்ந்திலன்
மறக்குமென்றுசெந்தாமரைக்கண்ணொடு *
மறப்பறஎன்னுள்ளே மன்னினான்தன்னை *
மறப்பனோ? இனி யான்என்மணியையே. (10)*

*மணியைவானவர்கண்ணனைத்தன்னதோர
ணியை* தென்குருகூர்ச்சடகோபன்*சொல்
பணிசெயாயிரத்துள் இவைபத்துடன் *
தணிவிலர் கற்பரேல் கல்விவாயுமே. (11)*

# இரண்டாம்நாள் ஸேவைசாற்றுமுறை

பெரியாழ்வார் திருமொழி :

**தடவரைவாய்மிளிர்ந்துமின்னும் தவளநெடுங்கொடிபோல் *
சுடரொளியாய்நெஞ்சினுள்ளே தோன்றும்என்சோதி நம்பி! *
வடதடமும்வைகுந்தமும் மதிள்துவராபதியும்*
இடவகைகள்இகழ்ந்திட்டு என்பால்இடவகைகொண்டனையே. (10)

**வேயர்தங்கள்குலத்துதித்த விட்டுசித்தன்மனத்தே *
கோயில்கொண்டகோவலனைக் கொழுங்குளிர்முகில்வண்ணனை *
ஆயரேற்றைஅமரர்கோவை அந்தணர்தமமுதத்தினை *
சாயைபோலப்பாடவல்லார்தாமும் அணுக்கர்களே. (11)

இரண்டாம் திருவந்தாதி :

**இறையெம்பெருமான்! அருளென்று * இமையோர்
முறைநின்று மொய்ம்மலர்கள்தூவ * – அறைகழல
சேவடியான் செங்கணெடியான் * குறளுருவாய்
மாவடிவில்மண்கொண்டான்மால். (99)

**மாலே ! நெடியோனே ! கண்ணனே ! * விண்ணவர்க்கு
மேலா ! வியன்துழாய்க்கண்ணியனே! * – மேலால்
விளவின்காய் கன்றினால்வீழ்த்தவனே ! * என்தன்
அளவன்றால் யானுடையஅன்பு. (100)

அன்பேதகளியா ஆர்வமேநெய்யாக *
இன்புருகிசிந்தையிடுதிரியா * – நன்புருகி
ஞானச்சுடர்விளக்கேற்றினேன், நாரணற்கு *
ஞானத்தமிழ்புரிந்தநான். (1)

திருவாய்மொழி (2–10) :

**சூதென்று களவும்சூதும்செய்யாதே *
வேதமுன்விரித்தான் விரும்பிய கோயில் *
மாதுறுமயில்சேர் மாலிருஞ்சோலை *
போதவிழ்மலையே புகுவதுபொருளே. (10)

**பொருளென்றுஇவ்வுலகம் படைத்தவன்புகழ்மேல் *
மருளில்வண்குருகூர் வண்சடகோபன் *
தெருள்கொள்ளச்சொன்ன ஓராயிரத்துள்இப்பத்து *
அருளுடையவன்தாள் அணைவிக்கும்முடித்தே. (11)

# மூன்றாம் நாள் ஸேவைசாற்றுமுறை

## நாச்சியார் திருமொழி :

**நாட்டைப் படையென்று அயன் முதலாத்தந்த நளிர்மாமலருந்தி *
வீட்டைப்பண்ணி விளையாடும் விமலன்தன்னைக்கண்டீரே? *
காட்டைநாடித்தேனுகனும் களிறும்புள்ளும்உடன்மடிய *
வேட்டையாடிவருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (9)

**பருந்தாட்களிற்றுக்கருள்செய்த பரமன்தன்னை * பாரின்மேல்
விருந்தாவனத்தேகண்டமை விட்டுசித்தன்கோதைசொல் *
மருந்தாமென்றுதம்மனத்தே வைத்துக்கொண்டுவாழ்வார்கள் *
பெருந்தாளுடையபிரானடிக்கீழ்ப் பிரியாதென்றும்இருப்பாரே. (10)

**தொட்டபடையெட்டும் தோலாதவென்றியான் *
அட்டபுயகரத்தான்அஞ்ஞான்று * குட்டத்துக்
கோள்முதலைதுஞ்சக் குறித்தெறிந்தசக்கரத்தான் *
தாள்முதலேநங்கட்குச்சார்வு. (99)

**சார்வுநமக்கென்றும் சக்கரத்தான் *
தண்துழாய்த் தார்வாழ்வரைமார்பன் தான்முயங்கும் *
காரார்ந்த வானமருமின்னிமைக்கும் வண்தாமரைநெடுங்கண் *
தேனமரும்பூமேல்திரு. (100)

திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் * திகழும்
அருக்கனணிநிறமும்கண்டேன் * செருக்கிளரும்
பொன்னாழிகண்டேன் புரிசங்கம்கைக்கண்டேன் *
என்னாழிவண்ணன்பால்இன்று. (1)

## திருவாய்மொழி ( மூன்றாம் பத்து ) :

**தளர்வின்றியேஎன்றும்யெங்கும்பரந்த தனிமுதல்ஞானமொன்றாய் *
அளவுடைஐம்புலன்கள் அறியாவகையால் அருவாகிநிற்கும் *
வளரொளி யீசனைமூர்த்தியைப் பூதங்கள்இருசுடரை*
கிளரொளிமாயனைக்கண்ணனைத்தாள்பற்றி யானென்றும்கேடிலனே. (10)

**கேடில்விழுப்புகழ்க்கேசவனைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
பாடலோராயிரத்துள் இவையுமொருபத்தும்பயிற்றவல்லார்கட்கு *
அவன் நாடும்நகரமும்நன்குடன்காண நலனிடையூர்திபண்ணி*
வீடும்பெறுத்தித்தன்மூவுலகுக்கும்தரும் ஒருநாயகமே. (11)

## நான்காம் நாள் ஸேவைசாற்றுமுறை

பெருமாள் திருமொழி :

**அன்றுசராசரங்களை வைகுந்தத்தேற்றி
அடலரவப்பகையேறிஅசுரர்தம்மை
வென்று*இலங்குமணிநெடுந்தோள்நான்கும்தோன்ற
விண்முழுதும்எதிர்வரத்தன்தாமம்மேவி
சென்றுஇனிதுவீற்றிருந்த அம்மான்தன்னைத்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
என்றும்நின்றான் அவனிவனென்றேத்தி நாளும்
இறைஞ்சுமினோஎப்பொழுதும்தொண்டீர்! நீரே. (10)

**தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
திறல்விளங்குமாருதியோடமர்ந்தான்தன்னை
எல்லையில்சீர்த்தயரதன்தன்மகனாய்த்தோன்றிற்று
அதுமுதலாத் தன்னுலகம்புக்கதீறா *
கொல்லியலும்படைத்தானைக்கொற்றவொள்வாள்
கோழியர்கோன்குடைக்குலசேகரன்சொற்செய்த *
நல்லியலின்தமிழ்மாலைபத்தும்வல்லார்
நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே. (11)

*நான்முகன் திருவந்தாதி :*

**ஏன்றேன் அடிமை இழிந்தேன்பிறப்பிடும்பை *
ஆன்றேன் அமரர்க்கமராமை * ஆன்றேன்
கடன்நாடும்மண்ணாடும்கைவிட்டு * மேலை
இடநாடுகாணஇனி. (95)

**இனியறிந்தேன் ஈசற்கும்நான்முகற்கும்தெய்வம் *
இனியறிந்தேன் எம்பெருமான் ! உன்னை*இனியறிந்தேன்
காரணன்நீகற்றவைநீ கற்பவைநீ * நற்கிரிசை
நாரணன்நீ நன்கறிந்தேன்நான். (96)

**நான்முகனைநாராயணன் படைத்தான்*நான்முகனும்
தான்முகனாய்ச்சங்கரனைத்தான்படைத்தான்யான்முகமாய்
அந்தாதிமேலிட்டு அறிவித்தேன்ஆழ்பொருளை *
சிந்தாமல்கொண்மின்நீர்தேர்ந்து. (1)

திருவாய்மொழி (நான்காம் பத்து) :

**உறுவதாவது எத்தேவும் எவ்வுலகங்களும்மற்றும்தன்பால் *
மறுவில்மூர்த்தியோடொத்து இத்தனையும்நின்றவண்ணம்நிற்கவே *
செறுவில்செந்நெல்கரும்பொடோங்கு திருக்குருகூரதனுள் *
குறியமாணுருவாகிய நீள்குடக்கூத்தனுக்கு ஆட்செய்வதே. (10)

**ஆட்செய்து ஆழிப்பிரானைச்சேர்ந்தவன் வண்குருகூர்நகரான் *
நாட்கமழ்மகிழ்மாலைமார்பினன் மாறன் சடகோபன் *
வேட்கையால்சொன்னபாடல் ஆயிரத்துள்இப்பத்தும் வல்லார் *
மீட்சியின்றிவைகுந்தமாநகர் மற்றதுகையதுவே. (1)

## ஐந்தாம் நாள் ஸேவைசாற்றுமுறை

கண்ணிநுண்சிறுத்தாம்பு :

**பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் *
செயல்நன்றாகத்திருத்திப் பணிகொள்வான்*
குயில்நின்றார்பொழில்சூழ் குருகூர்நம்பி *
முயல்கின்றேன் உன்தன்மொய்கழற்கன்பையே. (10)

**அன்பன்தன்னை அடைந்தவர்கட்கெல்லாம்
அன்பன் * தென்குருகூர் நகர்நம்பிக்கு *
அன்பனாய் மதுரகவிசொன்னசொல்
நம்புவார்பதி * வைகுந்தம் காண்மினே. (11)

கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணியபெருமாயன் * என்னப்பனில்
நண்ணித்தென்குருகூர் நம்பியென்றக்கால்
அண்ணிக்கும்அமுதூறும் என்நாவுக்கே. (1)

திருவிருத்தம் :

**ஈனச்சொல்லாயினுமாக * அறிதிரைவையம்முற்றும்
ஏனத்துருவாய் இடந்தபிரான் * இரும்கற்பகம்சேர்
வானத்தவர்க்கும்அல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க்கும்
ஞானப்பிரானையல்லாலில்லை * நான்கண்டநல்லதுவே. (99)

**நல்லார்நவில்குருகூர்நகரான் * திருமால் திருப்பேர்
வல்லா ரடிக்கண்ணிசூடிய * மாறன் விண்ணப்பம்செய்த
சொல்லார்தொடையல்இந்நூறும் வல்லார் எழுந்தார்பிறப்பாம்
பொல்லாவருவினை * மாயவன் சேற்றுஅள்ளல்பொய்ந்நிலத்தே. (100)

பொய்நின்றஞானமும் பொல்லாவொழுக்கும்அழுக்குடம்பும் *
இந்நின்றநீர்மைஇனியாமுறாமை * உயிரளிப்பான்
எந்நின்றயோனியுமாய்ப்பிறந்தாய் இமையோர்தலைவா
மெய்ந்நின்றுகேட்டருளாய் * அடியேன்செய்யும்விண்ணப்பமே. (1)

திருவாய்மொழி (5 – 10) :

**கூடிநீரைக்கடைந்தவாறும் அமுதம்தேவருண்ண * அசுரரை
வீடும்வண்ணங்களே செய்துபோனவித்தகமும் *
ஊடுபுக்கெனதாவியை உருக்கியுண்டிடுகின்ற * நின்தன்னை
நாடும்வண்ணம்சொல்லாய் நச்சநாகணையானே (10)

**நாகணைமிசைநம்பிரான்சரணே சரண்நமக்கென்று * நாள்தொறும்
ஏகசிந்தையனாய்க் குருகூர்ச்சடகோபன்மாறன் * ஆகநூற்றந்தாதி
ஆயிரத்துள்இவையும்ஓர்பத்தும்வல்லார் * மாகவைகுந்தத்து
மகிழ்வெய்துவர்வைகலுமே. (11)

## ஆறாம் நாள் ஸேவைசாற்றுமுறை

### பெரிய திருமொழி : (2–10)

**தூவடிவின்பார்மகள்பூமங்கையோடு
சுடராழிசங்கு இருபால்பொலிந்துதோன்ற *
காவடிவின்கற்பகமேபோலநின்று
கலந்தவர்கட்கு அருள்புரியும்கருத்தினானை

சேவடிகைதிருவாய்கண்சிவந்தஆடை
செம்பொன்செய்திருவுருவமானான்தன்னை
தீவடிவின்சிவனயனேபோல்வார் மன்னு
திருக்கோவலூரதனுள்கண்டேன்நானே. (9)

**வாரணம்கொள்இடர்கடிந்தமாலை நீல
மரதகத்தைமழைமுகிலேபோல்வான்தன்னை
சீரணங்குமறையாளர்நிறைந்த செல்வத்
திருக்கோவலூரதனுள்கண்டேனென்று *

வாரணங்குமுலைமடவார்மங்கைவேந்தன்
வாள்கலியனொலியைந்துமைந்தும்வல்லார்
காரணங்களால்உலகம்கலந்து அங்கு ஏத்தக்
கரந்தெங்கும்பரந்தானைக்காண்பர்தாமே. (10)

### திருவாசிரியம் :

**நளிர்மதிச்சடையனும் நான்முகக்கடவுளும் *
தளிரொளியிமையவர் தலைவனும்முதலா *
யாவகையுலகமும் யாவரும்அகப்பட *
நிலம்நீர்தீகால் சுடரிருவிசும்பும் *
மலர்சுடர்பிறவும் சிறிதுடன்மயங்க *
ஒருபொருள்புறப்பாடின்றி முழுவதும் அகப்படக்கரந்து *
ஓராலிலைச்சேர்ந்த எம் பெருமாமாயனையல்லது *
ஒருமாதெய்வம் மற்றுடையமோயாமே? (7)

### திருவாய்மொழி (6–10) :

**அகலகில்லேன்இறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா ! *
நிகரில்புகழாய் ! உலகம்மூன்றுடையாய் ! என்னையாள்வானே ! *
நிகரிலமரர்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே ! *
புகலொன்றில்லாஅடியேன் உன்னடிக்கீழ்அமர்ந்துபுகுந்தேனே. (10)

**அடிக்கீழமர்ந்துபுகுந்து அடியீர்வாழ்மினென்றென்றருள்கொடுக்கும் *
படிக்கேழில்லாப்பெருமானைப் பழனக்குருகூர்ச்சடகோபன் *
முடிப்பான்சொன்னஆயிரத்துத் திருவேங்கடத்துக்கிவைபத்தும் *
பிடித்தார்பிடித்தார்வீற்றிருந்து பெரியவானுள்நிலாவுவரே. (11)

# ஏழாம் நாள் ஸேவைசாற்றுமுறை

## பெரிய திருமொழி : (4–10)

**குடிகுடியாகக்கூடிநின்றுஅமரர் குணங்களேபிதற்றிநின்னேத்த *
அடியவர்க்குஅருளிஅரவணைத்துயின்ற ஆழியான்அமர்ந்துறைகோயில்*
கடியுடைக்கமலம்அடியிடைமலரக் கரும்பொடுபெருஞ்செந்நெல்அசைய*
வடியுடைஅன்னம்பெடையொடும்சேரும் வயல்வெள்ளியங்குடியதுவே. (9)

**பண்டுமுன்ஏனமாகிஅன்றுஒருகால் பாரிடந்துஎயிற்றினில்கொண்டு *
தென்திரைவருடப்பாற்கடல்துயின்ற திருவெள்ளியங்குடியானை *
வண்டறைசோலைமங்கையர்தலைவன் மானவேற்கலியன்வாயொலிகள் *
கொண்டிவைபாடும்தவமுடையார்கள் ஆள்வர்இக்குரைகடலுலகே. (10)

## பெரிய திருவந்தாதி :

**கார்கலந்தமேனியான் கைகலந்தஆழியான் *
பார்கலந்தவல்வயிற்றான் பாம்பணையான் * சீர்கலந்த
சொல்நினைந்துபோக்காரேல் சூழ்வினையினாழ்துயரை *
என்நினைந்துபோக்குவர் இப்போது ? (86)

**இப்போதும்இன்னும் இனிச்சிறிதுநின்றாலும் *
எப்போதும்ஈதேசொல் என்நெஞ்சே ! * எப்போதும்
கைகழலாநேமியான் நம்மேல்வினைகடிவான் *
மொய்கழலேஏத்தமுயல். (87)

**முயற்றிசுமந்தெழுந்து முந்துற்றநெஞ்சே
இயற்றுவாய் எம்மொடுநீகூடி * நயப்புடைய
நாவீன்தொடைகிளவி உள் பொதிவோம் * நற்பூவைப்
பூவீன்றவண்ணன்புகழ். (1)

## திருவாய்மொழி ( 7–10 ) :

**சிந்தைமற்றொன்றின்திறத்ததல்லாத்தன்மை தேவபிரானறியும் *
சிந்தையினால்செய்வதானறியாதன மாயங்கள்ஒன்றுமில்லை *
சிந்தையினால்சொல்லினால்செய்கையால் நிலத்தேவர்குழுவணங்கும்*
சிந்தைமகிழ்திருவாறன்விளையுறை தீர்த்தனுக்குஅற்றபின்னே. (10)

**தீர்த்தனுக்கற்றபின்மற்றோர்சரணில்லையென்றெண்ணி*தீர்த்தனுக்கே
தீர்த்தமனத்தனனாகிச் செழுங்குருகூர்ச்சடகோபன்சொன்ன *
தீர்த்தங்களாயிரத்துள் இவைபத்தும்வல்லார்களை * தேவர்வைகல்
தீர்த்தங்களேயென்றுபூசித்துநல்கியுரைப்பர் தம் தேவியர்க்கே. (11)

## பெரிய திருமொழி : (7–10)

**பண்ணினைப்பண்ணில்நின்றதோர்பான்மையைப்
பாலுள்நெய்யினைமாலுருவாய்நின்ற
விண்ணினை * விளங்குஞ்சுடர்ச்சோதியை
வேள்வியைவிளக்கினொளிதன்னை *
மண்ணினைமலையைஅலைநீரினை
மாலைமாமதியைமறையோர்தங்கள்
கண்ணினை * கண்களாரளவும்நின்று
கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனே. (9)

**கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனென்று
காதலால்கலிகன்றியுரைசெய்த*
வண்ணவொண்தமிழொன்பதோடொன்றிவை
வல்லராய்உரைப்பார், மதியம்தவழ்*
விண்ணில்விண்ணவராய்மகிழ்வெய்துவர்
மெய்ம்மைசொல்லின்வெண்சங்கமொன்றேந்திய
கண்ண ! * நின்தனக்கும்குறிப்பாகில்
கற்கலாம்கவியின்பொருள்தானே. (10)

## சிறியதிருமடல் :

***பெருந்தெருவே*
*ஊராரிகழிலும் ஊராதொழியேன்நான் ** *(77)*
*வாரார்பூம்பெண்ணைமடல்.*

*ஊராதொழியேன் உலகறியஒண்ணுதலீர்**
*சீரார்முலைத்தடங்கள்சேரளவும் *பாரெல்லாம்*
*அன்றோங்கிநின்றளந்தான் நின்றதிருநறையூர்*
மன்றோங்கஊர்வன்மடல்.

## திருவாய்மொழி (8–10) :

**வாய்க்கதமியேற்குஊழிதோறூழி * மாகாயாம்
பூக்கொள்மேனிநான்குதோள் பொன்னாழிக்கைஎன்னம்மான் *
நீக்கமில்லாஅடியார்தம் அடியாரடியாரடியார்எங்
கோக்கள் * அவர்க்கேகுடிகளாய்ச்செல்லும் நல்லகோட்பாடே. (10)

**நல்லகோட்பாட்டுலகங்கள் மூன்றினுள்ளும்தான்நிறைந்த *
அல்லிக்கமலக்கண்ணனை அந்தண்குருகூர்ச்சடகோபன் *
சொல்லப்பட்டஆயிரத்துள் இவையும்பத்தும்வல்லார்கள் *
*நல்லபதத்தால்மனைவாழ்வர் கொண்டபெண்டிர்மக்களே.* (11)

## ஒன்பதாம் நாள் ஸேவைசாற்றுமுறை

### பெரிய திருமொழி (10–10) :

***இன்னார் என்றறியேன்**
*என்னே! ஆழியொடும் **
*பொன்னார்சார்ங்கமுடையஅடிகளை**
*இன்னார் என்றறியேன். (9)*

**தொண்டீர் ! பாடுமினோ *
சுரும்பார்பொழில் மங்கையர்கோன் *
ஒண்தார்வேல்கலியனொலிமாலைகள்*
தொண்டீர் ! பாடுமினோ. (10)

### பெரியதிருமடல் :

***மாமுனிக்காத்*
*தென்னுலகமேற்றுவித்த திண்திறலும் * மற்றிவைதான் (147)*
*உன்னியுலவாவுலகறிய ஊர்வன்தான் **
*முன்னிமுளைத்தெழுந்து ஓங்கியொளிபரந்த* (148)*
*மன்னியபூம்பெண்ணைமடல்.*
*என்னிலைமையெல்லாம் அறிவித்தால்எம்பெருமான்**
*தன்னருளமாகமும்தாரானேல் * பின்னைப்போய்*
*ஒண்துறைநீர்வேலை உலகறியவூர்வன் நான்**
*வண்டறைபூம்பெண்ணைமடல்.*

### திருவாய்மொழி ( 9–10) :

**இல்லையல்லல் எனக்கேல்இனியென்குறை? *
அல்லிமாதரமரும் திருமார்பினன் *
கல்லிலேய்ந்தமதிள்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்ல * நாளும்துயர் பாடுசாராவே. (10)

**பாடுசாரா வினை பற்றறவேண்டுவீர் ! *
மாடநீடு குருகூர்ச்சடகோபன் * சொல்
பாடலானதமிழ் ஆயிரத்துள்இப்பத்தும்
பாடியாடி * பணிமின் அவன்தாள்களே. (11)

## பெரிய திருமொழி (11-8) :

**நந்தாநரகத்து எழுந்தாவகை *நாளும்
எந்தாய் ! தொண்டரானவர்க்குஇன்னருள்செய்வாய்
சந்தோகா ! தலைவனே! தாமரைக்கண்ணா*
அந்தோ ! அடியேற்கு அருளாய்உன்னருளே. (9)

**குன்றமெடுத்துஆநிரைகாத்தவன்தன்னை
மன்றில்மலிபுகழ் மங்கைமன்கலிகன்றிசொல் *
ஒன்றுநின்றஒன்பதும் வல்லவர்தம்மேல் *
என்னும்வினையாயின சாரகில்லாவே. (10)

## திருநெடுந்தாண்டகம் :

**அன்றாயர்குலமகளுக்கரையன்தன்னை
அலைகடலைக்கடைந்தடைத்தஅம்மான்தன்னை
குன்றாதவலியரக்கர்கோனைமாளக்
கொடுஞ்சிலைவாய்ச்சரந்துரந்துகுலங்களைந்துவென்றானை*
குன்றெடுத்ததோளினானைவிரிதிரைநீர்விண்ணகரம்
மருவிநாளும் நின்றானை * தண்குடந்தைக்கிடந்தமாலை
நெடியானைஅடிநாயேன்நினைந்திட்டேனே. (29)

**மின்னுமாமழைதவழும்மேகவண்ணா!
விண்ணவர்தம்பெருமானே! அருளாயென்று*
அன்னமாய்முனிவரோடுஅமரரேத்த
அருமறையைவெளிப்படுத்தஅம்மான் தன்னை *
மன்னுமாமணிமாடமங்கைவேந்தன் மானவேல்பரகாலன் கலியன்சொன்ன *
பன்னியநூல்தமிழ்மாலைவல்லார் தொல்லைப்
பழவினையைமுதலரியவல்லார்தாமே. (30)

## வேதச்சாற்று

யஜு॰ர் வேதம் – ஸம்ஹிதா:

ஸமுத்ர முதரமந்தரிக்ஷம் வாயுர் த்யாவா ப்ருதிவீ ஆண்டௌ க்ராவா ஸேபஸ்ஸோமோ ரேதோ யஜ்ஞும்ஜப்யதே தத்வித்யோ ததே யத்விதநுதே தத்ஸ்நயதி யந்மேஹதி தத்தர்ஷதி வாகேவாஸ்ய வாகஹர்வா அஶ்வஸ்ய ஜாயமாநஸ்ய மஹிமா புரஸ்தாஜ்ஜாயதே ராத்ரிரேநம் மஹிமா பஸ்சாதநு ஜாயத ஏதௌ வை மஹிமாவஶ்வமபிதஸ் ஸம்பபூவதுர்ஹயோ தேவா நவஹதர்வா ஸஸு॰ரான் வாஜீ கந்தர்வாநஶ்வோ மநுஷ்யான் ஸமுத்ரோ வா அஶ்வஸ்ய யோநி ஸ்ஸமுத்ரோ பந்து: ||

சாகை

யத்தர்ஶபூர்ணமாஸௌ யஜதே | அஶ்வஸ்யைவ மேத்யஸ்ய பதே பதே ஜு॰ஹோதி | ஏததநு க்ருதிஹஸ்மவை புரா | அஶ்வஸ்ய மேத்யஸ்ய பதே பதே ஜு॰ஹ்வதி | யோ வா அஶ்வஸ்ய மேத்யஸ்ய விவர்த்தநம் வேத | அஶ்வஸ்யை வ மேத்யஸ்ய விவர்த்தநே விவர்த்தநே ஜு॰ஹோதி | அஸௌவா ஆதித்யோஶ் வ: ஸ ஆஹவநீயம் ஆகச்சதி | தத்விவர்த்ததே| யதக்நிஹோத்ரம் ஜு॰ஹோதி | அஶ்வஸ்யைவ மேத்யஸ்ய விவர்த்தநே விவர்த்தநே ஜு॰ஹோதி | ஏததநுக்ருதி ஹஸ்மவைபுரா | அஶ்வஸ்ய மேத்யஸ்ய விவர்த்தநே விவர்த்தநே ஜு॰ஹ்வதி|

ஆரண்யகம்

யதேகாதஶேஹநப்ரவ்ருஜ்யதே | இந்த்ரோ பூத்வா த்ருஷ்டுபமேதி | யத்வாதஶேஸஹநப்ருவ்ருஜ்யதே | ஸோமோ பூத்வா ஸு॰த்யாமேதி | யத் புரஸ்தாதுப ஸதாம் ப்ருவ்ருஜ் யதே | தஸ்மாதித: பராங்மால்லோகாம் தபந் நேதி தஸ்மா தித: பராங் மூல் லோகாகும் ஸ்தபந்நேதி | யதுபரிஷ்டாது பஸதாம் ப்ருவ்ருஜ்யதே | தஸ்மாதமுதோSர் வஹிமாந் லோகாகும் ஸ்தபந் நேதி ய ஏவம் வேத | ஜவ தபதி|

காடகம்

தஸ்யைவாத்மா பதவித்தம் விதித்வா| ந கர்மணா லிப்யதே பாபகேந | பஞ்ச பஞ்சாஶதஸ் திவ்ருதஸ் ஸம்வத்ஸரா: | பஞ்ச பஞ்சாஶத: பஞ்சதஶா: | பஞ்ச பஞ்சாஶத ஸ்ஸப்ததஸா:| பஞ்சபஞ்சாஶத ஏகவிகும்ஶா: | விஶ்வஸ்ருஜாகும் ஸஹஸ்ர ஸம்வத்ஸரம் | ஏதேந வை விஸ்வஸ்ருஜ இதம்விஶ்வமஸ்ருஜந்த| யத்திஶ்வமஸ்ருஜந்த | தஸ்மாத் விஶ்வஸ்ருஜ: | விஶ்வமேநாநுப்ரஜாயதே | ப்ரஹ்மண: ஸ் ஸாயுஜ்யகும் ஸலோகதாம் யந்தி | ஏதாஸாமேவ தேவதாநாகும் ஸாயுஜ்யம் | ஸார்ஷ்டிதாகும் ஸமாநலோகாதாம் யந்தி| ய ஏததுபயந்தி | யேவைநத்ப்ராஹு: | யேப்யஶ்வைநத ப்ராஹு: | ஓம் |

உபநிஷத்

தஸ்யைவம் விதுஷோ யஞ்யஸ்யாத்மாயஜமாந: ஶ்ரத்தாபத்நீ ஶரீரமித்மமுரோ வேதிர்லோமாநி பர்ஹிர்வேதஶ்ஶிகாஹ்ருதயம் யூப: காம ஆஜ்யம் மந்யு:ப ஸுஸ் தபோக்நிஶ்ஶமயிதா தக்ஷிணாவாக்கோதா ப்ராண உத்காதா சக்ஷுர த்வர்யுர்மநோ ப்ரஹ்மா ஶ்ரோத்ரமக்நீத் யாவத்த்ரியதே ஸா தீக்ஷா யதஶ்நாதி யத்பிபதி ததஸ்ய ஸோமபாநம் யத்ரமதே ததுபஸதோயத் ஸஞ்சரத்யுபவிஶத் யமுதிஷ்டதே ச ஸப்ரவரக்யோ யந்முகம், ததாஹவநீயோ யதஸ்ய விஜ்ஞானம் தஜ்ஜுஹோதி யத்ஸாயம் ப்ராதரத்திதத்ஸமிதோ யத்ஸாயம் ப்ராதர்மத்ய திநஞ்ச தாநி ஸவநாநி யே அஹோராத்ரே தே தர்ஶபூர்ணமாஸௌ யேS அர்த்தமாஸாஶ்ச மாஸாஶ்ச தே சாதுர்மாஶ்யாநே யத்ருத வஸ்தேபஶுபந்தா யே ஸம்வத்ஸராஶ்ச பரிவத்ஸராஶ்ச தே அஹர்கணா: ஸர்வவேதஸம் வா ஏதத் ஸத்ர யந்மரணம் தத்வம்ருத ஏதத்வை ஜராமர்யமக்நிஹோத்ரம் ஸத்ரம் ய ஏவம் வித்வாநுதகயநே ப்ரமீயதே தேவாநாமேவ மஹிமாநம் கத்வாஸஅதி த்யஸ்ய ஸாயுஜ்யம் கச்சத்யத யோ தக்ஷிணே ப்ரமீயதே பித்ருணாமேவ மஹி மாநம் கத்வா சந்த்ரமஸஸ் ஸாயுஜ்யம்கச்சத்யேதௌ வைஸூர்யாசந்த்ர மஸோர் மஹிமாநௌ ப்ராஹ்மணோ வித்வாநபிஜயதி தஸ்மாத் ப்ரஹ்மணோ மஹிமாநமாப்நோதி தஸ்மாத் ப்ரஹ்மணோ மஹிமாநமித் யுபநிஷத் ||

ஸாம வேதம்

உந்நயாமி—ஹோஇ (இதி த்ரி:) | ஆதித்யம் ப்ராஞ்சம் யந்தமுந்நயாமி ஹோஇ (இதி த்ரி:) | அஹோராத்

ராண்யரித்ராணிஹோஇ (இதி த்ரி:) | த்யௌர்நௌர்ஹாஉ (இதி த்ரி:) | தஸ்யாமஸாவாதித்யஈயதே ஹாஉ (இதி த்ரி:) | தஸ்மந்வயமீயமாந-ஈயாமஹோ-ஹாஉ (இதி த்ரி:) | ஈயாமஹோ ஹாஉ (இதி த்வி:) ஈயாமஹோ-இ ஹா உ வா | ப்ரியேதாம கும்ஸ்த்ரியக்ஷ்ரே (இதி த்வி:)| ப்ரியேதாமகும்ஸ்த்ரியக்ஷ்ரே || 2-3-4-5 ||

சாந்தோக்யோபநிஷத்

தத்வைதத் ப்ரஹ்மாப்ரஜாபதய உவாச ப்ரஜாபதிர்ம நவேமநு: ப்ரஜாப்ய: ஆசார்ய குலாத்சேதமதீத்ய யதாவிதாநம் குரோ: கர்மாதி சேஷேணாபி ஸமாவ்ருத்ய குடும்பே சுஹசௌ தேசேஸ்வாத்யாயமதீயாநோ தார்மிகாந் விதததாத்மநி ஸர்வேந்த்ரியாணி ஸம்ப்ரதிஷ்டாப்யாஹிம்ஸந் ஸர்வபூதாந் யந்யத்ர தீர்த்தேப்ய: ஸகல்வேவம் வர்தயந்யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபி ஸம்பத்யதே ந ச புநராவர்த்ததே நச புநராவர்த்ததே ( 1 )

ஆப்யாயந்து மமாங்காநி வாக் ப்ராணஸ்சக்ஷு: ஸ்தோத்ர மயோ பலமிந்த்ரயாணிச ஸர்வாணி ஸர்வம் ப்ரஹ்மோபநிஷதம் மாஹம் ப்ரஹ்மநிகுர்யா மா மா ப்ரஹ்மநிராகரோதநிராகரண மஸ்த்வ நிராகரணம் மேஸ்து ததாத்மநி நிரதே ய உபநிஷத்ஸு தர்மாஸ்தே மயி ஸந்து தே மயி ஸந்து |

நாராயணாதர்வோபநிஷத்

ப்ரத்யகாநந்தம் ப்ரஹ்மபுருஷம் ப்ரணவஸ்வரூபம்| அகார உகாரோ மகார இதி | தா அநேகதா ஸமபவத்ததோமிதி | யமுக்த்வா முச்யதே யோகீ ஜந்மஸம்ஸாரபந்தநாத் | ஓம் நமோ நாராயணாயேதி மந்த்ரோபாஸக: | வைகுண்ட புவநம் கமிஷ்யதி | ததிதம் புண்டரீகம் விக்ஞானகநம் | தஸ்மாத் தடிதாபமாத்ரம் | ப்ரஹ்மந்யோ தேவகீபுத்ரோ ப்ரஹ்மண்யோ மதுஸூதந: | ப்ரஹ்மண்ய: புண்டரீகாக்ஷோ ப்ரஹ்மண்யோ விஷ்ணுரச்யுத இதி ||

ஸர்வபூதஸ்தமேகம் வை நாராயணம் | காரணபுருஷ மகாரணம் பரம் ப்ரஹ்ம ஓம் | ஏதத்யர்வசிரோ யோ அதீதே ப்ராதரதீயாநோ ராத்ரிக்ருதம் பாபம் நாசயதி | ஸாய மதீயாநோ திவஸக்ருதம் பாபம் நாசயதி | தத்ஸாயம் ப்ராதரதீ யாநோ அபாபோ பவதி | மாத்யந் திநமாதித்யாபிமுகோ தீயாந:

பஞ்சமஹா பாதகோபபாதகாத் ப்ரமுச்யதே | ஸர்வவேத பாராயணபுண்யம் லபதே| நாராயண ஸாயுஜ்ய மவாப்நோதி | ஸ்ரீமந் நாராயண ஸாயுஜ்ய மவாப்நோதி| ய ஏவம் வேத | இத்யுபநிஷத்||

ஆபத்ஸ்தம்பியதர்மஸூத்ரம்

ஓம் | அதாதஸ்ஸாமயாசாரிகாந் தர்மாந் வ்யாக்யாஸ்யாம: | தர்மக்ஞஸமய: ப்ரமாணம் வேதாஸ்ச | சத்வாரோ வர்ணா: ப்ராஹ்மணக்ஷத்ரியவைஶ்ய ஶூத்ரா: | தேஷாம் பூர்வ: பூர்வோ மந்மத: ஶ்ரேயாந் ||

ஸ்ரீமத்ராமாயணம்

**ததஸ்ஸ ப்ரயதோ வ்ருத்தோ வஸிஷ்டோ ப்ராஹ்மணைஸ்ஸஹ | ராமம் ரத்நமயே பீடே ஸஹஸீதம் ந்யவேஶயத் ||

**வஸிஷ்டோ வாமதேவஶ்ச ஜாபாலிரத காஶ்யப:|
காத்யாயநஸ்ஸுயஜ்ஞஸ்ய கௌதமோ விஜயஸ்ததா||

**அப்யஸிஞ்சந்நரவ்யாக்ரம் ப்ரஸந்நேந ஸுகந்திநா|
ஸலிலேநஸஹஸ்ராக்ஷம் வஸவோ வாஸவம் யதா||

ஸ்ரீ விஷ்ணுபுராணம்

இதி விவிதமதஜஸ்ய யஸ்ய ரூபம்
ப்ரக்ருதிபராத்ம மயம் ஸநாதநஸ்ய |
ஸ திஶது பகவாநஶேஷபும்ஸாம்
ஹரிரபஜந்ம ஜராதிகாம் ஸம்ருத்திம் ||

ஸ்ரீபகவத்கீதை

**யத்ர யோகேஶ்வர: க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தநுர்த்தர: |
தத்ரஸ்ரீர்விஜயோ பூதிர்த்ருவா நீதிர்மதிர்மம||

ஸ்தோத்ரரத்நம்

**அக்ருத்ரிமத்வச்சரணாரவிந்தப்ரேமப்ரகர்ஷாவதி மாத்மவந்தம் |
பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத மத்வ்ருத்த மசிந்தயித்வா||

ஸ்ரீபாஷ்யம்

யதி பரமபுருஷாயத்தம் முக்தைஶ்வர்யம், தர்ஹி தஸ்ய ஸ்வதந்த்வேந தத்ஸங்கல்பாந் முக்தஸ்ய புநராவ்ருத்தி ஸம்

பவா ஶங்கேத் யத்ராஹு * அநாவ்ருத்திஶ்ஶப்தாத நாவ்ருத் திஶ்ஶப்தாத் * (த்வி:) யதா நிகில ஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாநோ ஜகஜ் ஜந் மாதிகாரணம் ஸமஸ்தவஸ்து விலக்ஷணஸ்ஸர்வக்ஞஸ்ஸத்யஸங்கல்ப: ஆஸ்ரித வாத்ஸல் யைக ஜலதி: பரமகாரணிகோ நிரஸ்தஸமாப்யதிக ஸம்பாவந: பரஹ்ப்ரஹ் மாபிதாந: பரம புருஷோஸ்தீதி ஶப்தாதவ கம்யதே| ஏவமஹர ஹரநுஷ்டியமாந வரணாஶ்ரம தர்மா நுக்ர ஹீத ததுபாஸநருபதத் ஸமாராதநப்ரீத: உபாஸிநாந்அநாதி கால ப்ரவ்ருத்தாநந்த துஸ்தரகர்ம ஸஞ்சயருபா வித்யாம் விநிவர்த்யஸ் வயா தாத்ம்யாநுபவ ரூபாநவதிகா திஶயாநந்தம் ப்ராபய்ய புநர்நாவர்த்த யதீத்யபி ஶப்தாதேவா கம்யதே | ஶப்தஶ்ச ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபி ஸம்பத்யதே ந ச புநராவர்த்ததே ந ச புநரா வர்த்ததே இத்யாதிக:, ததா ச பகவதா வோக்தம் மாமுபேத்ய புநர்ஜந்ம துக்காலயம ஶாஸ்வதம் | நாப்நுவந்தி மஹாத்மாந: ஸம்ஸித்திம் பரமாம் கதா: || ஆப்ரஹ்மபவநால்லோகா: புநராவர்த்திநோர்ஜுன | மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே இதி| நசோச்சின்ன கர்மபந்தஸ்யா ஸங்குசித க்ஞானஸ்ய பரப்ரஹ் மாநுபவைக ஸ்வபாவஸ்ய ததேகப்ரியஸ்யா! நவதிகாதிஶயா நந்தம் ப்ரஹ்மாநுபவதோ ந்யாபேக்ஷாததர்தாரம்பாத்ய ஸம்பவாத் புநராவ்ருத்திஶங்கா | ந ச பரமபுருஷஸ்ஸத்யஸங்கல போஸ்யர்த மஹம் க்ஞாநிநம் லப்த்வா கதாசிதாவர்த் தயிஷ்யதி | ய யேவ மாஹ-ப்ரியோ ஹி க்ஞாநிநோத் யர்த்தம் மஹம் ஸ ச மம ப்ரிய: | உதாராஸர்வ ஏவைதே க்ஞாநீத்வாமைவ மே மதம் ஆஸ்தித: ஸ ஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் கதிம் || பஹூநாம் ஜந்மநாமந்தே க்ஞானவாந் மாம் ப்ரபத்யதே | வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: || இதி ஸூத்ராப்யாஸ: ஶாஸ்த்ரபரிஸமார்ப்திம் த்யோதயதி | இதி ஸர்வம் ஸமஞ்ஜஸம் ||

வரதராஜஸ்தவ:

ராமாநுஜாங்க்ரி ஶரணோஸ்மி குலப்ரதீபஸ் த்வாஸீத் ஸ யாமுந முநேஸ் ஸ ச நாத வம்ஶ்ய: | வம்ஶ்ய: பராங்குஶ முநே: ஸ ச ஸோ பி தேவ்யா தாஸஸ்தவேதி வரதாஸ்மி ததேக்ஷணீய: ||

யதிராஜ விம்சதி

விஜ்ஞாபநம் யதித மத்ய து மாமகீநம்
அங்கீகுருஷ்வ யதிராஜ ! த யாம்பு - ராசே !
அஜ்ஞோய மாத்ம - குண - லேச - விவர்ஜிதஸ்ச
தஸ்மா தநந்ய - சரணோ பவதீதி மத்வா

## திருவாய்மொழி (10–10) :

**சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில்பெரும்பாழேயோ
சூழ்ந்ததனில்பெரிய பரநன்மலர்ச்சோதீயோ ! *
சூழ்ந்ததனில்பெரிய சுடர்ஞானவின்பமேயோ ! *
சூழ்ந்ததனில்பெரிய என்னவாவறச்சூழ்ந்தாயே. (10)

**அவாவறச்சூழ் அரியைஅயனைஅரனைஅலற்றி *
அவாவற்றுவீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்சொன்ன *
அவாவிலந்தாதிகளால் இவையாயிரமும் * முடிந்த
அவாவிலந்தாதிஇப்பத்துஅறிந்தார்பிறந்தார்உயர்ந்தே (11)

உயர்வறவுயர்நலம் உடையவன் யவனவன் *
மயர்வறமதிநலம் அருளினன் யவனவன் *
அயர்வறுமமரர்கள் அதிபதி யவனவன் *
துயரறுசுடரடி தொழுதெழுஅன்மனனே (1–1–1)

## கண்ணிநுண்சிறுத்தாம்பு :

வேறொன்றும் நான் அறியேன் வேதம்தமிழ் செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர் ஏறு * எங்கள்
வாழ்வாமென்றேத்தும் மதுரகவியார் * எம்மை
ஆள்வாரவரேயரண்.

**கண்ணிநுண்சிறுத்தாம்பினால் நண்ணித்தென்குருகூர்
நாவினால் நவிற்று தேவுமற்றறியேன்
திரிதந்தாகிலும் பெரியவண்குருகூர்
நன்மையால்மிக்க அன்னையாய் அத்தனாய்
நம்பினேன் செம்பொன்மாட
இன்றுதொட்டும் குன்றமாட
கண்டுகொண்டுஎன்னை எண்திசையும்
அருள்கொண்டாடும் அருள்கொண்டு
மிக்கவேதியர் தக்கசீர்ச்சடகோபன்
**பயனன்றாகிலும் குயில்நின்றால்பொழில்
**அன்பன்தன்னை அன்பனாய்
கண்ணிநுண்சிறுத்தாம்பினால் நண்ணித்தென்குருகூர்
அண்ணிக்கும்அமுதூறும் என்னாவுக்கே.

## இராமானுச நூற்றந்தாதி :

**இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் *
மாலிருஞ்சோலையென்னும் பொருப்பிடம் மாயனுக்கென்பர்நல்லோர் *
அவை தம்மொடும்வந்து இருப்பிடம்மாயன்இராமானுசன்மனத்து
இன்று அவன்வந்து இருப்பிடம்*
என்தனிதயத்துள்ளே தனக்கின்புறவே. (106)

**இன்புற்றசீலத்துஇராமானுச! *என்றும்எவ்விடத்தும்
என்புற்றநோயுடல்தோறும் பிறந்துஇறந்து* எண்ணரிய
துன்புற்றுவீயினும்சொல்லுவதொன்றுண்டு உன்தொண்டர்கட்கே
என்புற்றிருக்கும்படி * என்னையாக்கிஅங்காட்படுத்தே. (107)

**அங்கயல்பாய்வயல்தென்னரங்கன் * அணியாகமன்னும்
பங்கயமாமலர்ப்பாவையை போற்றுதும் * பத்தியெல்லாம்
தங்கியதென்னத்தழைத்துநெஞ்சே ! நம்தலைமிசையே
பொங்கியகீர்த்தி * இராமானுசனடிப்பூமன்னவே. (108)

பூமன்னுமாது பொருந்தியமார்பன் * புகழ்மலிந்த
பாமன்னுமாறனடிபணிந்துய்ந்தவன் * பல்கலையோர்
தாம்மன்னவந்தஇராமானுசன்சரணாரவிந்தம்
நாம்மன்னிவாழ * நெஞ்சே ! சொல்லுவோம் அவன்நாமங்களே. (1)

## திருப்பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு*
பலகோடிநூறாயிரம் *
மல்லாண்டதிண்தோள்மணிவண்ணா! * உன்
சேவடி செவ்விதிருக்காப்பு.

அடியோமோடும்நின்னோடும் பிரிவின்றிஆயிரம்பல்லாண்டு *
வடிவாய்நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு *
வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு*
படைபோர்புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே.

## உபதேசரத்தினமாலை :

இன்றோ திருவாடிப்பூரம் * எமக்காக
அன்றோ இங்காண்டாளவதரித்தாள் * குன்றாத
வாழ்வான வைகுந்தவான் போகந்தன்னை யிகழ்ந்து *
ஆழ்வார்திருமகளாராய். (22)

பெரியாழ்வார்பெண்பிள்ளையாய் * ஆண்டாள்பிறந்த
திருவாடிப்பூரத்தின் சீர்மை * ஒருநாளைக்கு
உண்டோ மனமே! உணர்ந்துபார் * ஆண்டாளுக்கு
உண்டாகி லொப்பிதற்குமுண்டு. (23)

அஞ்சுகுடிக்கொருசந்ததியாய் * ஆழ்வார்கள்
தற்செயலாய்விஞ்சிநிற்குந்தன்மையளாய் * பிஞ்சாய்ப்
பழுத்தாளை யாண்டாளைப் பத்தியுடன்நாளும் *
வழுத்தாய் மனமே! மகிழ்ந்து. (24)

## இயல் சாத்து:

நன்றுந் திருவுடையோம் நானிலத்தில் எவ்வுயிர்க்கும் *
ஒன்றும் குறையில்லை ஓதினோம் * — குன்றம்
எடுத்தானடிசேரிராமாநுசன்தாள் *
பிடித்தார்பிடித்தாரைப்பற்றி. (1)

வாழிதிருக்குருகூர் வாழிதிருமழிசை *
வாழிதிருமல்லிவளநாடு * — வாழி
கழிபொறித்தநீர்ப்பொன்னித்தென்னரங்கன்
தன்னை * வழிபறித்தவாளன்வலி. (2)

திருநாடுவாழி திருப்பொருநல்வாழி *
திருநாட்டுத்தென்குருகூர்வாழி * — திருநாட்டுச்
சிட்டத்தமர் வாழி வாழி சடகோபன் *
இட்டத்தமிழ்ப்பாவிசை. (3)

மங்கைநகர்வாழி வண்குறையலூர்வாழி *
செங்கையருண்மாரிசீர்வாழி * — பொங்குபுனல்
மன்னித்துறைவாழி * வாழி பரகாலன்
மண்ணில்தமிழ்ப்பாவிசை. (4)

வாழியரோதென்குருகை வாழியரோதென்புதுவை *
வாழியரோதென்குறையல்மாநகரம் * — வாழியரோ
தக்கோர்பரவும்தடஞ்சூழ்பெரும்பூதூர் *
முக்கோல் பிடித்தமுனி. (5)

மொழியைக்கடக்கும்பெரும்புகழான் * வஞ்சமக்குறும்பாம்
குழியைக்கடக்கும்நங்கூரத்தாழ்வான் சரண்கூடியபின்
பழியைக்கடத்தும்இராமாநுசன் புகழ்பாடியல்லா
வழியைக்கடத்தல் * எனக்குஇனியாதும்வருத்தமன்றே. (6)

நெஞ்சத்திருந்துநிரந்தரமாகநிரயத்துய்க்கும் *
வஞ்சக்குறும்பின்வகையறுத்தேன் * மாயவாதியர்தாம்
அஞ்சப்பிறந்தவன்சீமாதவனடிக்கு அன்புசெய்யும் *
தஞ்சத்தொருவன்சரணாம்புயம்என்தலைக் கணிந்தே. (7)

ஊழிதொறும்ஊழிதொறும்உலகமுய்ய
உம்பர்களும்கேட்டுய்ய * அன்பினாலே
வாழியெனும்பூதம்பேய்பொய்கைமாறன்
மழிசையர்கோன்பட்டர்பிரான்மங்கைவேந்தன்
கோழியர்கோன்தொண்டர்துகள்பாணன்
கோதை குலமுனிவன்கூறியநூலோதி *
வீதிவாழியெனவருந்திரளைவாழ்த்துவார்தம்
மலரடிஎன்சென்னிக்குமலர்ந்தபூவே.

வாழித்திருநாமம் :

ஸர்வதேசதசாகாலேஷ்வவ்யாஹதபராக்ரமா
ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்தாம்
ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா
திகந்தவ்யாபி நீ பூயாத் ஸா ஹி லோகஹிதைஷிணீ

ஸ்ரீமந் ஸ்ரீரங்க ச்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய
ஸ்ரீமந் ஸ்ரீரங்க ச்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய

நமஶ் ஸ்ரீஶைலநாதாய குந்தீ நகரஜந்மநே
ப்ரஸாதலப்த பரமப்ராப்ய கைங்கர்ய ஸாலிநே

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம்

வாழிதிருவாய்மொழிப்பிள்ளை மாதகவால் *
வாழும்மணவாளமாமுனிவன் * – வாழியவன்

மாறன்திருவாய்மொழிப்பொருளை * மாநிலத்தோர்
தேறும்படியுரைக்குஞ்சீர்.

செய்யதாமரைத்தாளிணைவாழியே சேலைவாழிதிருநாபிவாழியே *
துய்யமார்பும்புரிநூலும்வாழியே சுந்தரத்திருத்தோளிணைவாழியே *

கையுமேந்தியமுக்கோலும்வாழியே
கருணைபொங்கியகண்ணிணைவாழியே*

பொய்யிலாதமணவாளமாமுனி புந்திவாழிபுகழ்வாழிவாழியே.
அடியார்கள்வாழ அரங்கநகர்வாழ *
சடகோபன்தண்தமிழ்நூல்வாழ * – கடல்சூழ்ந்த
மண்ணுலகம்வாழ * மணவாளமாமுனியே !
இன்னும்ஒருநூற்றாண்டுஇரும்.

## ஆண்டாள் வாழித்திருநாமம்

திருவாடிப்பூரத்துச்செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதுஞ் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப்பின்னானாள் வாழியே
ஒருநூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கற்கே கண்ணியுகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே,

## நம்மாழ்வார் வாழித்திருநாமம்

திருக்குருகைப் பெருமாள் தன்திருத்தாள்கள் வாழியே *
திருவான திருமுகத்துச்செவ்வி என்றும் வாழியே *
இருக்குமொழி யென்னெஞ்சில் தேக்கினான் வாழியே
எந்தை யெதிராசர்க் கிறைவனார் வாழியே *
கருக்குழியில் புகாவண்ணம் காத்தருள்வோன் வாழியே *
காசினியி லாரியனாய்க் காட்டினான் வாழியே *
வருத்தமற வந்தென்னை வாழ்வித்தான் வாழியே *
மதுரகவி நம்பிரான் வாழி வாழி வாழியே,

மேதினியில் வைகாசிவிசாகத்தோன் வாழியே *
வேதத்தைச்செந்தமிழால்விரித்துரைத்தான் வாழியே
ஆதிகுருவாயப் புவியி லவதரித்தான் வாழியே *
அனவரதஞ் சேனையர்கோ னடிதொழுவோன் வாழியே *
நாதனுக்கு நாலாயிரமுரைத்தான் வாழியே *
நன் மதுரகவிவணங்கும் நாவீறன் வாழியே *
மாதவன் பொற்பாதுகையாய் வளர்ந்தருள்வோன் வாழியே *
மகிழ்மாறன் சடகோபன் வையகத்தில் வாழியே *

ஆன திருவிருத்தம் நூறு மருளினான் வாழியே *
ஆசிரிய மேழுபாட்டளித்தபிரான் வாழியே *
ஈனமற வந்தாதி யெண்பத்தே ழீந்தான் வாழியே *
இலகு திருவாய்மொழியாயிரத் தொருநூற்றிரண்டுரைத்தான்வாழியே*
வானணியும் மாமாடக் குருகைமன்னன் வாழியே *
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே *
சேனையர் கோனவதாரஞ் செய்தவள்ளல் வாழியே *
திருக்குருகைச் சடகோபன் திருவடிகள் வாழியே

## மதுரகவிகள் வாழித்திருநாமம்

சித்திரையிற் சித்திரைநாள் சிறக்கவந்தோன் வாழியே *
திருக்கோளூ ரவதரித்த செல்வனார் வாழியே *
உத்தர கங்காதீரத் துயர் தவத்தோன் வாழியே *
ஒளிகதிரோன் தெற்குதிக்க வுகந்துவந்தோன்வாழியே *
பத்தியொடு பதினொன்றும் பாடினான் வாழியே*
பராங்குசனே பரனென்று பற்றினான் வாழியே *
மத்திமாம் பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே *
மதுரகவி திருவடிகள் வாழிவாழிவாழியே.

## எம்பெருமானார் வாழித்திருநாமமும் நாள் பாட்டும்

**சீராருமெதிராசர் திருவடிகள் வாழி*
திருவரையில்சாத்தியசெந்துவராடை வாழி*
ஏராரும் செய்யவடி வெப்பொழுதும் வாழி*
இலங்கிய முந்நூல்வாழியிணைத்தோள்கள் வாழி*
சோராத துய்யசெய்ய முகச்சோதி வாழி*
தூமுறுவல்வாழி துணைமலர்க்கண்கள் வாழி*
ஈராறு திருநாமமணிந்தவெழில் வாழி*
இனிதிருப்போடெழில் ஞானமுத்திரை வாழியே.*

*அறுசமயச் செடியதனை யடியறுத்தான் வாழியே*
அடர்ந்துவரும் குதிர்ட்டிகளை யறத்துறந்தான்வாழியே*
செறுகலியைச் சிறிதுமறத்தீர்த்துவிட்டான் வாழியே*
தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே*
மறையதனில் பொருளனைத்தும் வாய்மொழிந்தான் வாழியே*
மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே*
அறமிகு நற்பெரும்பூதூ ரவதரித்தான் வாழியே*
அழகாருமெதிராசர் அடியிணைகள் வாழியே*

**சங்கரபாற்கர யாதவபாட்ட பிரபாகரர் தங்கள்மதம்
சாய்வுறவாதியர் மாய்குவரென்று சதுமறைவாழ்ந்திடுநாள்
வெங்கலியிங்கினி வீறுநமக்கிலையென்று மிகத் தளர்நாள்
மேதினிநஞ்சுமை யாறுமெனத்துயர்விட்டு விளங்கிய நாள்
மங்கையராளி பராங்குசமுன்னவர் வாழ்வுமுளைத்திடுநாள்
மன்னியதென்னரங்காபுரிமாமலை மற்றுமுவந்திடுநாள்
செங்கயல்வாவிகள் சூழ்வயல்நாளும் சிறந்த பெரும்பூதூர்
சீமானிளையாழ்வார் வந்தருளியநாள் திருவாதிரைநாளே.

மணவாளமாமுனிகள் வாழித்திருநாமம்

இப்புவியி லரங்கேசர்க் கீடளித்தான் வாழியே
எழில்திருவாய்மொழிப்பிள்ளை யிணையடியோன் வாழியே
ஐப்பசியில் திருமூலத்தவதரித்தான் வாழியே
அரவரசப்பெருஞ்சோதி யனந்தனென்றும் வாழியே
எப்புவியும்ஸ்ரீசைலமேத்தவந்தோன்வாழியே
ஏராரும் மெதிராச ரெனவுதித்தான் வாழியே
முப்புரிநூல் மணிவடமும் முக்கோல்தரித்தான்வாழியே
மூதரியமணவாளமாமுனிவன் வாழியே.

செந்தமிழ்வேதியர் சிந்தைதெளிந்துமகிழ்ந்திடுநாள்
சீருலகாரியர்செய்தருள்நற்கலை தேசுபொலிந்திடுநாள்
மந்தமதிப்புவிமானிடர் தங்களை வானிலுயர்த்திடுநாள்
மாசறுஞானியர்சேரெதிராசர்தம் வாழ்வுமுளைத்திடுநாள்
கந்தமலர்ப்பொழில்சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடுநாள்
காரமர்மேனியரங்கநகர்க்கிறை கண்கள் களித்திடு நாள்
அந்தமில்சீர்மணவாளமுனிப்பர னவதாரம் செய்திடு நாள்
அழகுதிகழ்ந்திடும் மைப்பசியில் திருமூலமதெனு நாளே.

❋ ❋ ❋